# மான்மின் செய்திகள்

# Manmin News

Manmin Ministries India 15D/41, Ponnankinaru St, Villivakkam, Chennai - 49, India. Ph: 044-26172471 Email: manminnewsasia@gmail.com

## WCDN–னின் 12வது சர்வதேச கிறிஸ்தவ மருத்துவ மாநாடு மலேசியா




WCDN சர்வதேச மலேசிய மாநாடு (படங்கள் 1,9); மருத்துவர். ப்ரான்ஸ் ஜே. க்ரோன்ஜி மற்றும் மருத்துவர். சுவ் வெங்ச்சி சிறப்பு சொற்பொழிவுகள் (படங்கள் 2,3); சுகமான சாட்சிகளை அறிமுகம் செய்தல், ஆராதனை, துதிகள் மற்றும் கைக்குட்டை சுகமளிக்கும் கூட்டங்கள் (படம் 6); மருத்துவர். ஓங் ஹொாக் சிவ் காலை ஆராதனையில் செய்தி வழங்குதல் (படம் 7); அறிவர். ஜேராக் லீ அவர்களின் சார்பாக இயக்குனர் கில்பர்ட் சே அவர்கள் மாநாடு ஆயத்த குழுவிடமிருந்து பாராட்டு மடலை பெற்றுக்கொள்தல் (படம் 4); வல்லமை குழுவினரும் பங்குபெற்றவர்களும் (படம் 5,8).

WCDN (உலக கிறிஸ்தவ மருத்துவ குழுமம்) என்பது தேவனுடைய சுகமாக்குதலின் கிரியைகளை மருத்துவ தரவின் அடிப்படையில் நிரூபிக்கும் ஒரு ஸ்தாபனமாகும். ஒவ்வொரு ஆண்டும் WCDNனானது சர்வதேச கிறிஸ்தவ மருத்துவ மாநாட்டை நடத்துகிறது.

இந்த ஆண்டு 2015ல், மலேசியாவிலுள்ள கொலாலம்பூரில் மே 16 மற்றும் 17 ஆகிய தேதிகளில் மாநாடு நடைபெற்றது. அமெரிக்கா, ஸ்பெயின், நார்வே, பல்கேரியா மற்றும் மெக்சிகோ உட்பட 31 நாடுகளிலிருந்து 350க்கும் மேற்பட்ட மருத்துவர்கள், மருத்துவ நிபுணர்கள் இந்த மாநாட்டில் பங்கு பெற்றனர்.

மாநாடு, அதன் ஒருங்கிணைப்பு குழுவின் தலைவர் மருத்துவர். டேனியல் துரையப்பாவின் வரவேற்பு செய்தியோடு ஆரம்பமானது. அடுத்ததாக, WCDN–னின் நிறுவனரும் குழுமத்தின் தலைவருமான அறிவர். ஜேராக் லீ அவர்களுடைய செய்தியானது வீடியோ மூலமாக காண்பிக்கப்பட்டது. அவர் மாநாடானது தேவனுடைய தெய்வீக சுபாவத்தின் மகத்துவத்தை அனுபவிக்கும் விலையேறப் பெற்ற வாய்ப்பு என குறிப்பிட்டார்.

மருத்துவரீதியில் நிரூபிக்கப்பட்ட ஒன்பது சுகமான சாட்சிகள் அறிமுகப்படுத்தப்பட்டன. அந்த பல்வேறு வகையான சாட்சிகளாவன: இருமுனைய செல்பிறழ்வு, எதிர்மறை எண்ணங்கள் மற்றும் பேச்சுக்கோளாறு (அமெரிக்கா); மூக்குகண்ணீர் சுரப்பிகளில் அடைப்பு (கொரியா); சிறுகுடல் இரத்தஅடைப்பு (அமெரிக்கா); கருவிழிப்படல இரத்தநாள உருவாக்கம் (கொரியா); 95% மூளை காயங்கள் (மலேசியா); அறுவை சிகிச்சையின்றி இரட்டை கண்இமைகள் உருவாக்கம் (கொரியா) மற்றும் பிறந்த குழந்தையின் பெருமூளையில் இரத்த உறைவு (பரோயே தீவுகள்).

WCDNனின் தலைவர் மருத்துவர். கில்பர்ட் சே ஜனநாயக குடியரசு நாடான காங்கோவில் எபோலா வைரஸ் வியாதி சுகமானதை குறித்த சாட்சியை அறிமுகப்படுத்தினார். குடியரசு நாடான காங்கோவின் ஈகுவடார் மாநிலத்தின் கவர்னர், அறிவர். ஜேராக் லீ அவர்களுடைய ஜெபத்தைப் பெற்றுக்கொண்ட பின்பதாக எபோலா வைரஸானது அந்நாட்டை விட்டு முற்றிலும் நீங்கியது. இந்த சாட்சியின் விவரத்தை கேட்டபோது பங்காளர்கள் ஆச்சரியப் பட்டவர்களாய் தேவனுக்கு மாபெரும் மகிமை செலுத்தினர். மருத்துவர் ப்ரையன் எஸ். ஹீயோ நுரையீரலில் உண்டான வீக்கங்களின்நிமித்தம் இதயத்தின் இடது தமனி குறுகி செயலிழந்துபோன ஒருவர், காலம் மற்றும் நேரத்திற்கு அப்பாற்பட்ட கைக்குட்டை ஜெபத்தினால் சுகமாக்கப்பட்ட சாட்சியை அறிமுகப்படுத்தியபோது அது மிகப் பெரிதான வரவேற்பை பெற்றது.

கூடுதலாக, அனைவருக்கும் சுவாரஸ்யத்தை உருவாக்க விசேஷித்த சொற்பொழிவுகள் வழங்கப் பட்டன. மருத்துவர் சுவ் வெங்ச்சி (மலேசியா) தேவ–னுடைய சுகமாகுதலின் கிரியைகளை நம்புவதற்கு முன்பு தான் சந்தித்த அனுபவங்கள் சிலவற்றை குறித்து பேசினார். மருத்துவர். ஆல்வின் ஜே. ஹவாங் (கொரியா) “சிருஷ்டிகராகிய தேவனுடைய வல்லமை” என்ற தலைப்பிலான சிறப்பு சொற்பொழிவை கொடுத்தார். மருத்துவர். ப்ரான்ஸ் ஜே. க்ரோன்ஜி (தென் ஆப்பிரிக்கா) “வியாதிகளின் ஆவிக்குரிய வேர்கள்” என்ற தலைப்பில் பேசினார். மேலும், லிம் சியோ லிம் ஷெரி என்ற மலேசிய பெண்மணி, மார்பக புற்றுநோயிலிருந்து தெய்வீக சுகத்தைப் பெற்ற தன்னுடைய அனுபவத்தை குறித்து சாட்சியமளித்தார்.

வல்லமை பாடகர்குழு (மான்மின் மத்திய திருச்சபையின் கலைநிகழ்ச்சி குழுக்களில் ஒன்று) உள்ளூர் மற்றும் ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகளிலும் விசேஷித்த கலைநிகழ்ச்சிகளை காண்பித்தனர். கலைநிகழ்ச்சியானது பங்கு பெற்றவர்களின் இதயத்தை அசைத்து அவர்களுக்கு ஆவியின் நிறைவை தந்தது. அநேக மக்கள் தாங்கள் கிறிஸ்தவ நிகழ்ச்சிகளில் இதைப் போன்ற தொடப்படக்கூடிய ஒரு நிகழ்ச்சியை கண்டதில்லை என்று கலைநிகழ்ச்சிகளை புகழ்ந்தனர்.

மிக முக்கியமாக, மான்மின் உலக கிளைசபைகளின் வழிநடத்தும் போதகர் உயர்திரு. ஹிசன் லீ அவர்கள் மாநாட்டிற்கு விசேஷித்த கவுரவ பேச்சாளராய் அழைக்கப்பட்டிருந்தார். அவர் முதல்நாளில் கைக் குட்டை சுகமளிக்கும் கூட்டத்தை நடத்தினார்; இரண்டாம் நாளில் “விசுவாசத்தின் அளவுகள்” என்ற விசேஷித்த செய்தியை கொடுத்தார். அவருடைய கைக்குட்டை ஜெபத்தின்மூலமாக பங்கு பெற்றவர்கள் மனந்திரும்பினார்கள். வலிகளோடு இருந்தவர்கள் அதிலிருந்து விடுவிக்கப்பட்டனர்; நடக்க மிகவும் கஷ்டப்பட்ட ஒரு மனிதன் நடக்க ஆரம்பித்தார். அந்த இடத்திலேதானே பங்கு பெற்றவர்கள் ஜீவிக்கிற தேவனுடைய கிரியைகளை கண்டனர்.

அவர்களில் குறிப்பாக மருத்துவர். தீமோத்தேயு சங் தன்னுடைய மருத்துவமனையில் உள்ள நோயாளிக்காக ஜெபத்தைப் பெற்றுக்கொண்டார். அந்த நோயாளி மூளை மற்றும் முதுகு தண்டு வடத்திலுள்ள திசுக்களில் ஏற்பட்ட பாதிப்பினால் கோமா நிலையில் இருந்தார். ஆனால் ஜெபத்தைப் பெற்ற பின்பதாக அந்த நோயாளி மிக துரிதமாக புதுப்பிக்கப்பட்டார்.

இந்த மாநாட்டின் மூலம், WCDN–னானது நிர்வாக அதிகாரத்தில் வலுவடைந்தது; ஆவிக்குரிய பெலனையும் பெற்றுக்கொண்டது. அவர்கள் கர்த்தரை அறியாத அநேக கல்வி கற்ற மக்களுக்கும், இரட்சிப்பை பெறுவதற்கான ஆவிக்குரிய விசுவாசம் இல்லாத அநேக கிறிஸ்தவர்களுக்கும் ஜீவனுள்ள தேவனை வெளிப்படுத்தக்கூடிய சாத்தியத்தை உறுதிச் செய்தனர். 13வது மாநாடு 2016ல் ஸ்பெயின் நாட்டில் நடைபெறவுள்ளது.



தலைமை போதகர். அறிவர். ஜேராக் லீ

# சுகமாக்கும் ஆண்டவர்

"நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்" (1பேதுரு 2:24)

நம்முடைய பாவங்கள் அனைத்திலிருந்தும் நம்மை மீட்கும்படியாக இயேசு சுமந்த சிலுவையின் அநாதி திட்டத்தை நாம் புரிந்துக் கொள்ளும்போது நாம் தேவனுடைய எல்லையற்ற அன்பை உணர முடியும்.

தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசுவை உலகத்திற்கு அனுப்பி தம்முடைய குமாரனுடைய மனதுருக்கம் மற்றும் பாடுகளின் மூலமாக மனுக்குல இரட்சிப்பை பூரணமாய் நிறைவேற்றி முடித்தார். நாம் இயேசு சாட்டையால் அடிக்கப்பட்டு அவரது இரத்தத்தை சிந்திய அநாதி திட்டத்தை ஆராய்ந்து பார்ப்போம்.

## 1. சாட்டையால் அடிக்கப்பட்டு இரத்தம் சிந்தியதின் அநாதி திட்டம்

சாட்டையால் அடிக்கப்படுவது என்பது ஒரு சாதாரண தண்டனை அல்ல. ரோம சாம்ராஜ்யத்தில் நன்கு பயிற்சியளிக்கப்பட்ட போர்ச் சேவகர்கள் இயேசுவை அடித்தனர். சாட்டை அல்லது சவுக்கு சரீரத்தை சுற்றியவுடன் போர்ச் சேவகர்கள் அதை வலுமையாக இழுக்க, மாம்ச துண்டுகள் கிழிக்கப்பட்டன. சாட்டையின் முனையிலிருந்த கொடுக்குகள் அவருடைய சரீரத்தை ஊடுருவின. அவருடைய எலும்புகள் வெளியே தெரியுமளவிற்கு அவர் காயப்பட்டு அதிகமான இரத்தத்தை அவர் சிந்தினார்.

ஏன் இயேசு சாட்டையால் அடிக்கப்பட்டு ஏன் அவர் தம் இரத்தத்தை சிந்த வேண்டும்? ஏசாயா 53:5ல், "நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்" என்று வாசிக்கிறோம். எழுதப்பட்டுள்ளபடி நம்மை மன்னித்து சுகமாக்கும்படி இயேசு சாட்டையால் அடிக்கப்பட்டு இரத்தம் சிந்தினார்.

யாத்திராகமம் 15:26ல், தேவன் அவரே நமது பரிகாரி என்று சொல்கிறார். அவருடைய கற்பனைகளை நாம் கைக்கொண்டு பாவம் செய்யாமல் இருக்கும்போது நம் மீது எந்த ஒரு வியாதியும் வராது என்று அவர் சொல்கிறார். ஆக வியாதியிலிருந்து சுகம் பெறுவதற்கு நாம் நம்முடைய பாவங்களிலிருந்து முதலாவது மன்னிப்பை பெற வேண்டும்.

மத்தேயு 9:2, "அங்கே படுக்கையிலே கிடந்த ஒரு திமிர்வாதக்காரனை அவரிடத்தில் கொண்டு வந்தார்கள். இயேசு அவர்களுடைய விசுவாசத்தைக் கண்டு, திமிர்வாதக்காரனை நோக்கி: மகனே, திடன்கொள், உன் பாவங்கள் உனக்கு மன்னிக்கப்பட்டது என்றார். இயேசு அந்த மனிதனை சுகமாக்குவதற்கு முன் முதலாவதாக அவனுடைய பாவ பிரச்சனையை தீர்த்தார். யோவான் 5:14லிலும்கூட, "அதற்குப் பின்பு இயேசு அவனைத் தேவாலயத்திலே கண்டு: இதோ, நீ சொஸ்தமானாய் அதிக கேடான தொன்றும் உனக்கு வராதபடி இனிப் பாவஞ் செய்யாதே என்றார்" என்று குறிப்பிடுகிறது. நீங்கள் உங்கள் பாவங்களிலிருந்து மன்னிப்பை மனந்திரும்புதலின் மூலமாகப் பெற்றுக்கொண்டாலும் கூட நீங்கள் மீண்டுமாகப் பாவத்தில் வாழ்ந்தால் ஏதோ பயங்கரமான காரியம் உங்களுக்கு நேரிடக் கூடும்.

வியாதியினுடைய மூல வேர் பாவம் என்பதை நம்மால் பார்க்க முடிகிறது. மனிதர்களை பாவத்திலிருந்து மீட்பதற்கு இரத்தம் சிந்துதல் இருக்க வேண்டும். அதனால் இயேசு வியாதிகளிலிருந்து நம்மை விடுதலையாக்குவதற்கேதுவாக சாட்டையால் அடிக்கப்பட்டு தம் இரத்தத்தை சிந்தினார்.

## 2. சுகமாக்குகிற ஆண்டவரை சந்திப்பதற்கு

ஆக, சாட்டையினால் அடிக்கப்பட்டு தம் இரத்தத்தை சிந்தியதால் நம்முடைய வியாதிகளிலிருந்து இயேசு நம்மை மீட்டுக் கொண்டார் என்று யாரெல்லாம் இயேசுவை விசுவாசிக்கிறார்களோ அவர்கள் இனி பெலவீனங்கள் அல்லது வியாதிகளால் கஷ்டப்பட வேண்டியதில்லை (மத்தேயு 8:17).

ஆனால் சில விசுவாசிகள், "நான் பலவீனமாய் இருக்கிறேன்" அல்லது "பாவங்களைக் களைந்துப் போடுவது கடினமாய் உள்ளது" என்று கூறுகிறார்கள். நீங்கள் அவ்வாறு நினைத்து அறிக்கை செய்தால் நீங்கள் பெலவீனமாகி பாவங்களை அகற்றுவதற்கு கடினமாய் உணருவீர்கள். நீங்கள், "நான் தேவனுடைய கிருபையால் ஆரோக்கியமாய் உள்ளேன்; நான் நன்றாயுள்ளேன்" என்று எவ்வகையான சூழ்நிலையிலும் அறிக்கை செய்தால், நீங்கள் அறிக்கை செய்த வண்ணமே தேவ கிருபையும் பெலமும் உங்கள்மீது வரும். நீங்கள் அசதியை மேற்கொள்வீர்கள்; பார்ப்பதற்கு கைக்கூடாத காரியங்களெல்லாம் கைகூடுகிற காரியங்களாகி விடும்.

நீங்கள் சுகமாவதற்காக ஜெபத்தைப் பெற்றுக் கொள்ளும்போது, "நான் ஏற்கனவே சுகமானேன்" என்று நீங்கள் அறிக்கை செய்யவேண்டுமே தவிர, "நான் சுகமடைவேன் என்று நம்புகிறேன்" என்று அல்ல. அப்போது தேவன் உங்களது விசுவாசத்தின்படி கிரியை செய்வார். சிலர், "எனக்கு வேதனை இன்னமும் இருக்கும்போது நான் ஏற்கனவே சுகமாகிவிட்டேன் என்று எப்படி கூறமுடியும். அது பொய் சொல்லுதல் இல்லையா" என்று கூறுவர். ஆனால் நீங்கள் ஆவிக்குரிய விசுவாசத்தை சரியாய் புரிந்துக்கொண்டால் இப்படி சொல்ல மாட்டீர்கள்.

எபிரெயர் 11:1, "விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும், காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது" என்று கூறுகிறது. காணப்படாதவைகளின்மீது விசுவாசத்தோடு நம்பிக்கை வைக்கும்போது அது நிஜமாக மாறும். ஆனால் அது நம் உதடுகளில் அறிக்கை செய்வதால் நடந்துவிடும் என்று அர்த்தம் அல்ல. நம்முடைய இருதயங்களிலிருந்து வரும் விசுவாசத்தோடு நம்முடைய உதடுகளில் அறிக்கை செய்யும்போது அது நடக்கும்.

வியாதியிலிருந்து சுகமாவதும் அது போல்தான். நாம் "தேவனுடைய வல்லமையால் வியாதிகளும் பெலவீனங்களும் ஏற்கனவே போய்விட்டன" என்று விசுவாசித்து சொன்னால் ஆண்டவர் நமது விசுவாசத்தின்படி கிரியை செய்வார். இதன் காரணம், நம்முடைய பெலவீனங்களிலிருந்தும் வியாதிகளிலிருந்தும் நம்மை மீட்கும்படியாக இயேசு ஏற்கனவே சாட்டையால் அடிக்கப்பட்டு தம்முடைய இரத்தத்தை சிந்தினார்.

ஆனால் இதை நீங்கள் நம்பாமல், விசுவாசத்தோடு அறிக்கை செய்யாமல் இருந்தால் உங்கள் வியாதி குணமாக்கப்படமாட்டாது. நீங்கள் எத்தனை முறை ஜெபத்தைப் பெற்றுக்கொண்டாலும், நீங்கள் உங்கள் இருதயத்தில், "நான் இன்னும் வியாதியாயுள்ளேன். நான் இன்னமும் சுகமாகவில்லை" என்று விசுவாசிப்பீர்கள். அதனால் இன்னமும்கூட நிஜமாகவே வியாதியாயிருப்பீர்கள். நீங்கள் இந்த எதிர்மறையான சிந்தனைகளை உடைத்தாலொழிய உங்களால் தேவனுடைய கிரியையை அனுபவிக்க முடியாது.

சிருஷ்டிகராகிய தேவனுடைய வல்லமையானது வியாதிகளை சுகமாக்குவது மட்டுமல்ல, அது சிருஷ்டிப்பின் வல்லமையை தானே காட்டும். தேவனால் எந்த ஒரு வியாதியையும் அல்லது அங்கவீனத்தையும் சுகமாக்க முடியும்.

குறிப்பாக, எழுப்புதல் கூட்டங்கள் மற்றும் அயல்தேசத்துப் படைமுயற்சி கூட்டங்களில் எண்ணற்ற மக்கள் ஒரே நேரத்தில் சுகமாகின்றனர். அவர்கள் மேடையிலிருந்து ஜெபத்தைப் பெற்றுக் கொண்டாலும், அவர்கள் புற்றுநோய் மற்றும் எய்ட்ஸ் போன்ற பலவகையான குணமாக்க முடியாத வியாதிகளிலிருந்து சுகமாயினர். மேலும் குருடர்கள் பார்வையடைந்தனர்; ஊமையர் பேசினர்; செவிடர் கேட்டனர்; முடவர் நடந்தனர். அவர்கள் துதிக்கையில் அல்லது பிரசங்கங்களை கேட்டுக் கொண்டிருக்கையில் தானே சுகமடைந்தனர்.

## 3. விசுவாசிகள் சுகமடைய முடியாததற்கான காரணம்

இயேசு சாட்டையால் அடிக்கப்பட்டதால் தங்கள் வியாதிகளிலிருந்து தங்களை மீட்டுக் கொண்டார் என்று தாங்கள் விசுவாசிப்பதாக அவர்கள் சொன்னாலும், ஏன் சில விசுவாசிகள் வியாதிகளில் இன்னமும் கஷ்டப்படுகின்றனர்? இதற்கு காரணம் அவர்கள் தேவனுடைய நீதியை சரியாக பின்பற்றுவதில்லை.

யாத்திராகமம் 15:26 சொல்கிறது, "நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய்க் கேட்டு, அவர் பார்வைக்குச் செம்மையானவைகளைச் செய்து, அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால், நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன். நானே உன் பரிகாரியாகிய கர்த்தர் என்றார்." இங்கு, 'எகிப்து' என்பது ஆவிக்குரிய ரீதியில் உலகத்தைக் குறிக்கிறது. எகிப்தின் மீது வந்த பத்து வாதைகள் இந்த பூமியிலே உள்ள அனைத்து வியாதிகளையும் குறிக்கிறது.

நாம் தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொண்டால், நமக்கு எந்த ஒரு வியாதியும் இராது. நாம் வியாதிப்பட்டாலும்கூட, நாம் அறிக்கை செய்து மனந்திரும்பினால், தேவன் "நானே உன் பரிகாரியாகிய கர்த்தர்" என்று சொன்னபடியே அவர் நம்மை சுகமாக்குவார். ஆனால் இங்கு இந்த வசனம் மனுஷருடைய பார்வையில் அல்ல தேவனுடைய பார்வையில் சரியானதை செய்ய வேண்டும் என கூறுகிறது. எது சரி என்பது வித்தியாசமான மக்களுக்கு வித்தியாசமாய் உள்ளது. காரணம் அவர்கள் வளருகையில் வித்தியாசமான காரியங்களைப் பார்த்து, கேட்டுக் கற்றுக் கொள்கின்றனர். அவர்களது சூழ்நிலைகளும் மதிப்புகள் அனைத்தும் முற்றிலும் வித்தியாசமாய் இருக்கின்றன. ஆகவேதான் ஒரு மனிதன் சிலவற்றை சரி என நினைக்கிற அதே நேரத்தில் மற்றொருவன் அவற்றை தவறாக நினைக்கிறான். ஆகவே நாம் தேவனுடைய வார்த்தையை ஒரே தரமாக எடுத்துக் கொள்ள வேண்டும். தேவனுடைய பார்வையில் சரியானது மட்டுமே உண்மையில் சரியானவை.

உதாரணமாக, மற்ற பிள்ளைகள் உங்கள் பிள்கைளை அடித்தால், உங்களில் சிலர் மிகவும் வருத்தப்பட்டு அந்தப் பெற்றோர்களிடம் போய் வழக்காடுவீர்கள். இருப்பினும் தேவனுடைய நீதி நமக்கு, "ஒருவன் உன்னை ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் காட்டு," "சமாதானத்தை நாடுங்கள்" மற்றும் "உன் சத்துருக்களையும் நேசி" என்று கூறுகிறது. தேவனுடைய நீதியை பின்பற்றுவது என்பது தற்காலிகமாக இழப்பை போல காணப்பட்டாலும், இறுதியாக தேவன் அந்த நபரை அங்கீகரித்து அவனை உயர்த்துவார்.

சில மக்கள் இப்படி நினைக்கலாம், "நான் தேவனுடைய பல கற்பனைகளை எப்படி கைக்கொள்ள முடியும்? என்று. ஆனால் தேவனுடைய கட்டளைகளை கைக்கொள்ளுதல் என்பது ஏதோ கடினமான காரியமல்ல. பரிசுத்த ஆவி நமக்கு உதவுவார், தேவன் நமக்கு கிருபையும் பெலனும் தருவார் என்று நினைத்து நாம் விசுவாசத்தோடு கடினமாய் முயற்சிக்கும் பொழுது அது நமக்கு எளிமையாய் இருக்கும்.

"நான் களைந்துபோட அநேக காரியங்கள் உண்டு. இவையெல்லாம் எப்போது களைந்துப் போட போகிறேன்?" என்று நீங்கள் நினைத்தால், உங்கள் இருதயத்திலிருந்து களைந்துப்போட மிகவும் கடினமாய் தோன்றுகிற காரியத்தை களைந்துப் போடுவதற்கு நீங்கள் உபவாசித்து ஜெபிப்பது மிக நன்று. நீங்கள் அதைக் களைந்துப்போட்ட பின்னர், நீங்கள் மீதியுள்ளதைக் களைந்துப் போடுவது எளிது. அது ஒரு மரத்தை பிடுங்கி எடுப்பது போலத்தான். மரத்தின் ஆணிவேரை நீங்கள் பிடுங்கிவிட்டால், மீதமுள்ள வேர்களைப் பிடுங்குவது என்பது மிக எளிதாகிவிடும்.

2 நாளாகமம் 16ல், யூதாவின் தெற்கு ராஜ்யத்தின் ராஜாவான ஆசா தேவனை நன்கு சேவித்தான். ஆனால் அவனுடைய விசுவாசம் மாறியபோது அவனுக்கு வியாதி வந்தது. அச்சமயத்தில் அவன் தேவனிடத்தில் அதிகமாய் நெருங்கி வந்து முற்றும் மனந்திரும்பி அவரை சார்ந்திருக்க வேண்டும். ஆனால் அவன் கர்த்தரை தேடாமல் மருத்துவர்களை தேடினான். இறுதியில் அவன் சுகம் பெறாமல் மரணமடைந்தான். மக்கள் பலர் "நான் சர்வ வல்லமையுள்ள தேவனை விசுவாசிக்கிறேன்" என்று கூறுவர். ஆனால் நிஜ வாழ்க்கையில் ஏதாயினும் நடக்குமாயின் அப்பேற்பட்டவர்கள் தேவனை சார்ந்துக் கொள்ளாமல் உலகத்தைச் சார்ந்துக் கொள்வர். அவர்கள் சுகத்தை பெற வழிவகுக்கும் ஆவிக்குரிய விசுவாசத்தைப் பெறுவதில்லை. அவர்கள் இருளிலிருந்து வெளிச்சத்தில் வந்து நடந்தால்தான் அவர்களால் பாவச் சுவரை தகர்த்து, ஆவிக்குரிய விசுவாசத்தைப் பெற்று தேவனுடைய கிரியைகளை அனுபவிக்க முடியும்.

கிறிஸ்துவுக்குள் பிரியமான சகோதர சகோதரிகளே இயேசு சாட்டையால் அடிக்கப்பட்டு இரத்தத்தை சிந்தியதால் நம்முடைய வியாதிகள் பெலவீனங்கள் அனைத்திலிருந்தும் நம்மை மீட்டுக் கொண்டார். எல்லாவற்றையும் செய்யக்கூடிய தேவனை சார்ந்து, தேவனுடைய கட்டளைகளைக் கைக்கொள்ளும்படி உங்களை ஊக்கப்படுத்துகிறேன். இப்படிச் செய்வதால் உங்கள் பரிகாரியாகிய ஆண்டவரைச் சந்தித்து நல் ஆரோக்கியத்தைப் பெற்றுக்கொள்ளும்படியாக உங்களை ஊக்கப்படுத்துகிறேன்.

**விசுவாசத்தின் அறிக்கை**

1. மான்மின் மத்திய திருச்சபை வேதாகமம் தேவனால் உச்சரிக்கப்பட்ட பரிபூரணமும் பிழையற்றதுமான வார்த்தை என நம்புகிறது.
2. மான்மின் மத்திய திருச்சபை திரித்துவ தேவனின் ஐக்கியத்தையும் கிரியைகளையும் நம்புகிறது; பரிசுத்த பிதாவாகிய தேவன், பரிசுத்த குமாரனாகிய தேவன் மற்றும் பரிசுத்த ஆவியாகிய தேவன்
3. மான்மின் மத்திய திருச்சபை, இயேசு கிறிஸ்துவின் மீட்கும் இரத்தத்தினால் மாத்திரமே நம்முடைய பாவங்கள் மன்னிக்கப்படுகின்றது என நம்புகிறது.
4. மான்மின் மத்திய திருச்சபை இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலையும், பரமேறுதலையும் அவரின் இரண்டாம் வருகையையும், 1000 வருட அரசாட்சியையும், நித்திய பரலோகத்தையும் நம்புகிறது.
5. மான்மின் மத்திய திருச்சபை அங்கத்தினர்கள் ஒவ்வொரு முறையும் அவர்கள் கூடிவரும்போதெல்லாம் தங்களது விசுவாச அறிக்கையை "அப்போஸ்தலருடைய விசுவாச பிரமாணத்தின்" மூலமாக அறிக்கை செய்து, அதின் சொற்படியான உள்ளடக்கத்தை நம்புக்கின்றனர்.

"எல்லோருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர் [தேவன்]..." [அப். 17:25]

"அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை; நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை" [அப். 4:12]








**மருத்துவர். கில்பர்ட் சே**, WCDN தலைவர்,
யோன்சாய் செயில் மருத்துவமனையின் தலைமை இயக்குனர்

சம்பவம் 1

## “எந்த ஒரு அறுவை சிகிச்சையும் இல்லாமல் அவர்கள் இரட்டை இமைகளை பெற்றனர்”

மக்கள் ஆத்துமாவிற்கு ஜன்னல் கண்கள்தான் என கூறுகின்றனர். ஒருவருடைய கண்களுடைய தோற்றம் அந்த நபருடைய முதல் சந்திப்பில் தாக்கத்தை ஏற்படுத்தும். குறிப்பாக, பெரிய தெளிந்த கண்கள் நல்ல அபிப்பிராயத்தை ஏற்படுத்தும். இரட்டை இமைகள் (கண் இமைக்கு மேலே மற்றொரு இமை கோடு) கண்ணிமைக்கு மேலுள்ள தோல்கள் தசையுயர்த்திமூலம் தசைநாண்களாக உருவெடுத்து கண் இமையின் மேல்புறத்தில் இணைவதால் நிகழ்கிறது. வழக்கமாக ஆசிய மக்களுக்கு தசைநாண்களை இணைக்கும் திசுக்கள் இல்லாததால், அவர்களில் அநேகருக்கு இரட்டை கண்ணிமைகள் இருக்காது. ஆனால் மான்மின் மத்திய திருச்சபையின் அநேக விசுவாசிகள் WCDN–னின் நிறுவனர் தலைமை போதகர் அறிவர். ஜேராக் லீ அவர்களுடைய ஜெபத்தின்மூலமாக அறுவைச் சிகிச்சை ஏதும் இல்லாமல் இரட்டை கண்ணிமைகளை பெற்றுள்ளனர். இங்கு அம்மக்களின் சில சாட்சிகள் உள்ளன.



சகோதரி ஹேமிமா, வயது 24, மான்மின் மத்திய திருச்சபையின் கலை நிகழ்ச்சி குழுவைச் சார்ந்த பரலோக நடனக்குழுவை சார்ந்தவர் ஆவார். ஒவ்வொரு நிகழ்ச்சிகளுக்கும் அவள் தன் கண் இமைகளில் மடிப்புக்கோடு போட வேண்டியிருந்தது. அதனால் அதை செய்வதற்கு அவர்களுக்கு நீண்ட நேரம் எடுத்தது. அவள் இரட்டை இமைகள் பெற வேண்டும் என ஆசைப் பட்டாள்.

அவளது இந்த ஆசையை மனதில் வைத்து அறிவர். லீ அவர்களுடன் கைகுலுக்கினாள். பின்னர் அவள் பலமாய் அசைக்கப்பட்டவளாய் அவள் இரட்டை இமை பெற்றுக்கொள்ள முடியும் என்று உணர ஆரம்பித்தாள். அதனால் அவள் தலைமை போதகர் அறிவர். லீ அவர்களுடன் குலுக்கிய தன் கைகளை அவளது கண்களில் வைத்து ஜெபித்தாள். பின்னர் இரட்டை இமைகள் உருவாயின! தேவன் அவள் மன விருப்பத்திற்கு பதிலளித்தார்.



மூத்த கண்காணியை மிக் யங் சியோவுக்கு வயது 47 ஆகிறது. 2014 ஆம் ஆண்டு நடந்த மான்மின் கோடை ஏகாந்தத்தின்போது அறிவர். லீ அவர்களது ஜெபத்தை அவள் பெற்றுக்கொண்ட பின் இரட்டை இமைகளைப் பெற்றாள்.

அவள் வளரும் நாட்களில் தன் தாய்க்கு நேராக கொண்டிருந்த சலிப்பையும் வெறுப்பையும் ஜெபத்தைப் பெற்றுக் கொள்கையில் முற்றிலுமாய் அறிக்கை செய்தாள். அச்சமயத்தில் பரிசுத்த ஆவியின் அக்கினி அவள் மீது வந்தது. அவளுக்கு கண்கள் சிறியதாய் இருந்ததால் அவள் இரட்டை இமைகள் பெற்றுக்கொள்ள விரும்பி, தன் கண்கள் மீது கை வைத்து ஜெபித்தாள். பிற்பாடு, வீட்டிலே அவள் தன் முகத்தைக் கழுவும்போது அவள் தன் இரட்டை இமைகளைக் கண்ணாடியில் கண்டாள்.



கண்காணியை யுன்கியங் பார்க், 43 வயதாகும் இவர், தன்னுடைய 29வது வயதிலே இரட்டை இமைகள் பெற்றுக் கொள்ள விரும்பி விசுவாசத்தோடு ஜெபித்து மூவான் மதுர தண்ணீரை தெளித்தாள். பின் அவளும்கூட இரட்டை இமைகளைப் பெற்றாள்.

மூவான் மதுர தண்ணீர் என்பது ஜியோனாமில் உள்ள மூவானின் கடல் பகுதியில் உள்ள உப்புக் கடல் தண்ணீர் குடிக்கக்கூடிய நல்ல தண்ணீராய் மாறியதாகும். அது யாத்திராகமம் 15ல் மாராவின் கசப்பான நீர் மதுரமாய் மாறியது போன்றது. மக்கள் அந்த தண்ணீரைக் குடித்து, பயன்படுத்தி அத்தண்ணீரைத் தெளிக்கும்போது, அவர்களால் தேவனுடைய வல்லமையான கிரியைகளை அனுபவிக்க முடிகிறது. அந்த தண்ணீர் மூலமாக தசையுயர்த்தி நாண்படல திசுக்கள் மற்றும் இரட்டை இமைகள் உருவாகின்றன.

சம்பவம் 2

## “எபோலா வைரஸ் DR காங்கோவில் அழிக்கப்பட்டது”

எபோலா வைரஸ் வியாதியின் முதல் தாக்கம் 1971ல் காங்கோவில் உள்ள எபோலா நதி கரையின் அருகில் நிகழ்ந்தது. வட ஆப்பிரிக்காவில் தற்போது கிளம்பிய (முதல் சம்பவம் மார்ச் 2014ல் அறிக்கை செய்யப்பட்டது) எபோலா தாக்கம் தான் பெரியதும் மிக சிக்கலானதுமாக இருந்தது. ஏப்ரல் 2015ன் படி, இந்த தாக்கம் 25, 556 அறிக்கை செய்யப்பட்ட சம்பவங்கள் மற்றும் 10, 587க்கும் அதிகமான மரணங்களையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த நோய் மரணத்தின் உயர் விகிதத்தைக் கொண்டுள்ளது; தாக்கப்பட்டவர்களில் 25 முதல் 95 சதவிகிதத்தினரில் 50 சரிவிகித அளவிலானவர்களை கொன்றுள்ளது. DR காங்கோவில்தான் இதன் முதல் தாக்கம் நிகழ்ந்தது. இது மக்களை பீதியடைய செய்தவாறு ரழு தாக்கம் ஏற்படுத்தியுள்ளது.

பழ வௌவால்கள் தான் எபோலா வைரஸின் காரணம் என கருதப்பட்டது. எபோலா வைரஸ் என்பது மழை காட்டிலுள்ள அல்லது மரித்த அல்லது நோய்வாய்பட்ட சிப்பன்ஸி, கொரில்லா, பழவௌவால்கள் மற்றும் காட்டு மிருகங்கள் போன்றவைகளின் பாதிக்கப்பட்ட இரத்தம், திரவம், அவயவம் அல்லது மற்ற உடல் திரவங்களோடு நெருங்கிய தொடர்பின் மூலமாக மனித ஜனத்தொகைக்குள் அறிமுகம் செய்யப்பட்டது.

எபோலா வைரஸ் மனித உடலுக்குள் நுழைந்து இயற்கை நோய் எதிர்ப்பு செல்களை அழித்துவிடும். அது நோய் எதிர்ப்பு சக்தியை குறைத்து எண்டோதிலியத்தை அழித்துவிடும். அது வீக்கத்தையும் அதிர்ச்சியையும் ஏற்படுத்துகிறவாறு இரத்த நாள சிதைவுகளை அதிகரிக்கும். மேலும் அது கணைய செல்களை அழித்துவிடும். அது இரத்த உறைதலை தடுக்கும். அது இரத்தக்கசிவு, அதிர்ச்சி மற்றும் மரணத்திற்குகூட வழிநடத்தும்.

முதல் அறிகுறிகள் திடீரென காய்ச்சல், மயக்கம், தசைவலி, தலைவலி மற்றும் வரண்ட தொண்டை ஆகும். இது பின்னர் வாந்தி, பேதி, தடிப்பு, செயலற்ற சிறுநீரகம் மற்றும் கணையம் ஆகியவற்றால் பின் தொடரப்படும். சில சம்பவங்களில், உட்புற மற்றும் வெளிப்புற இரத்தப்போக்கு ஏற்படும். ஆனால் இதுவரை எந்த ஒரு தடுப்பு மருந்துகளும் கண்டு பிடிக்கப்படவில்லை.

2014ன் முடிவில் DR காங்கோ போயெண்டே மாநிலத்தில் எபோலா தாக்கத்தை குறித்து ஆளுநர் செபாஸ்டின் இப்பெட்டோ பென்கோ அவர்கள் அளித்த சாட்சியை இப்போது கவனிப்போம்.

ஆகஸ்டு 11, 2014 அன்று, இக்கணாமோங்கோ கிராமத்தில் எபோலா வைரஸால் ஒரு பெண்மணி மரித்தாள். அம் மரணத்திற்குப் பின் ஒரே வாரத்திற்குள் 13 பேர் எபோலா நோயின் அறிகுறிகளோடு மரணமடைந்தனர் என அறிக்கை வெளியானது. செப்டம்பர் 2 அன்று, உலக சுகாதார நிறுவனம் (WHO) 31 மரணங்களும், 53 உறுதிப்படுத்தப்பட்ட சம்பவங்களும் உண்டு என கூறியது. அது நாட்டிற்கு நெருக்கடியாக இருந்தது. DR காங்கோவின் அதிபர் ஜோசப் கபிலா அவர்கள் ஈகுவெடார் மாநில ஆளுநரான செபாஸ்டின் இம்பிடே பென்கோவிடம் எபோலா வைரஸ் தாக்கத்தை அழிக்குமாறு கட்டளையிட்டார். ஆனால் அவரால் ஏதும் செய்ய முடியவில்லை.

ஆளுநர் பென்கோ அவர்கள் DR காங்கோ நாட்டிலுள்ள கின்சாசா மான்மின் சபையில் ஆறு ஆண்டுகளாக பங்குப் பெற்று வருகிறார். அவர் அநேக அற்புத அடையாளங்களையும், அறிவர். லீ அவர்கள் மூலமாக வெளிப்படும் வல்லமையான கிரியைகளையும் கண்டுள்ளார். அதனால் எபோலா வைரஸை அழிக்குமாறு அறிவர். லீ அவர்களிடம் ஜெபிக்கும்படி கேட்டுக் கொண்டார். அறிவர். லீ அவர்கள் இதற்காக ஜெபித்தார். அந்நேரத்திலிருந்து ஒருவர்கூட பாதிக்கப்படவில்லை; மரணங்களும் ஏற்படவில்லை.

WHOவின் அங்கீகரிப்பின்படி, எந்த ஒரு புதிய சம்பவங்களும் கண்டறியாமல் 42 நாட்கள் கடந்து சென்றால்தான் தேசத்தில் எபோலா வைரஸ் நோயின் தாக்கம் முடிவடைந்தது என பிரகடனப்படுத்தப்பட வேண்டும். 42 நாட்கள் என்பது எபோலாவிற்கான வளர்ச்சி காலத்தினுடைய (21 நாட்கள்) இரண்டு மடங்கை குறிக்கிறது. 42 நாட்களாக எந்த ஒரு புதிய சம்பவமும் இல்லை. DR காங்கோ எபோலா தாக்கத்திலிருந்து முற்றிலும் விடுபட்டது. இந்நிலை சிகிச்சையளிக்கப்பட மிகவும் கஷ்டமானதாக இருந்தாலும்கூட பல மக்கள் இந்த வைரஸிலிருந்து பாதுகாக்கப்பட்டனர். தேவனுக்கே மகிமை! அறிவர். ஜேராக் லீ அவர்களே நன்றி!



DR காங்கோ
ஈகுவெடார் மாநில ஆளுநர்
செபாஸ்டின் இம்பென்டோ பென்கோ




# ஜீவனுள்ள தேவனுடைய சுகமாக்குதலின் கிரியைகள்

மலேசியாவில் 2015ல் கிறிஸ்தவ மருத்துவர்கள் கூடினர். அவர்கள் WCDN சர்வதேச கிறிஸ்தவ மருத்துவர்கள் மாநாட்டில் பங்கேற்று, தேவனுடைய கிரியைகளை மருத்துவ தரவின் அடிப்படையில் நிரூபித்து அவருக்கு மகிமை செலுத்தினார்கள். அங்கு அறிமுகப்படுத்தப்பட்ட பல சாட்சிகளில் அறிவர். ஜேராக் லீ அவர்களது ஜெபத்தால் நிகழ்த்தப்பட்ட சுகமாக்குதலின் கிரியைகள் சில இங்கே உள்ளன.



**மருத்துவர். ஜோன்சங் கிம், மிரே குழந்தைகள் மருத்துவனையின் முதன்மை இயக்குனர், பாஜ⁶**

## “அவள் கருவிழிப்படல இரத்தநாள உருவாக்கத்தால் பார்வையை இழக்கும் அபாயத்தில் இருந்து விடுவிக்கப்பட்டாள்”



17 வயதான சகோதரி நாயங்ச்சோய்–க்கு கிட்டப்பார்வை இருந்தது. டிசம்பர் 2013ல், திடீரென்று அவளுடைய இடது கண் கோளாறாகி, அவளுடைய பார்வைத் திறன் மங்கலானது. அவளுக்குப் படிப்பதில் மாத்திரமல்ல, மாறாக அவளுடைய அன்றாட வாழ்க்கையில் ஒவ்வொரு செயலையும் செய்வதும் கடினமாக இருந்தது.

ஏப்ரல் 2014ல், அவள் கண் பரிசோதனை செய்தாள். அப்பரிசோதனை அவளுக்கு கிட்டப்பார்வையுடன் CNV எனப்படும் கருவிழிப்படல இரத்தநாள உருவாக்கம் என்னும் வியாதி இருப்பதை காண்பித்தது. CNV என்பது கருவிழிப்படலத்தினுள்ளாக புதிய இரத்தநாளங்களை உருவாக்கும் வியாதியாகும். அது பார்வைத் திறனை சீரழித்து, நிறபாகுபாட்டை உருவாக்கி, உருமாற்றத் தோற்றத்தை தடை செய்துவிடும். CNV வியாதியானது இரத்த நாளங்களில் உயர் அளவிலான ஊசியை (anti-VEGF) செலுத்துவதின்மூலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது; முறையான சிகிச்சை இல்லாவிட்டால் அது பார்வைத்திறனையே பறித்துவிடும்.

ஆகஸ்டு 2014ல், அவள் அறிவர். ஜேராக் லீ அவர்களுடைய ஜெபத்தை மான்மின் கோடை சுற்றுலா முகாமில் முழு இருதயத்தோடு பெற்றுக்கொண்டாள். ஜெபத்தைப் பெற்ற பிறகு அவளுக்கு இருந்த எல்லா அறிகுறிகளும் நீங்கி அவள் எல்லாவற்றையும் தெளிவாக பார்க்க ஆரம்பித்தாள். அவளுடைய OCT சோதனையானது அவள் தேறினதை காண்பித்தது. மருத்துவர்கள் பரிசோதனை முடிவை கண்டு ஆச்சரியமடைந்தனர்; அவர்கள் CNV–யானது anti VEGF மருந்தைப் பயன்படுத்தாமல் குணமானது ஒரு அதிசயம் என்றனர்.



◀ ஜெபத்திற்கு முன்பு : நாளங்களுக்கு இடையேயான தெளிவற்ற நிலை



▶ ஜெபத்திற்கு பின்பு : நாளங்களுக்கு இடையே தெளிவான நிலை



**மருத்துவர். ப்ரையன் எஸ் ஹீயோ, WCDN-னின் செயலாளர்**

## “நுரையீரல் வீக்கத்தினால் ஏற்பட்ட இருதய செயலிழப்பால் மரணத்தருவாயிலிருந்த அவர் உயிர்பெற்றார்”



48 வயதான பாவெல் காமிக்கோவ் என்பவருக்கு இருதய வியாதி இருந்ததால் 2012ல் அவருக்கு இதய தமனி இரத்தக்குழாயில் மாற்றுவழி அறுவை சிகிச்சை நடந்தது. 2013ல், அவர் சாதாரண உடற்பயிற்சியை செய்து கொண்டிருந்தபோது திடீரென மார்பில் சுருக்கென வலி தொடர்ந்து ஏற்பட்டதாக கூறினார். அக்டோபர் 15ல், அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

அவருடைய நிலைமை அந்த நேரத்தில் இயல்பாகதான் இருந்தது. ஆனால் அவர் தூக்கத்திற்காக மாத்திரைகளை எடுத்துக் கொள்ளும் அளவிற்கு அவருடைய நிலைமை நாளடைவில் மிகவும் மோசமானது. நுரையீரல் வீக்கத்தினால் அவருடைய இடது தமனிச்சிரை கடுமையான விதத்தில் செயலிழந்தது. அந்த நேரத்தில் யாராய் இருந்தாலும் இனி அவரால் உயிர்வாழ முடியாது என்றுதான் சொல்லுவார்கள். பத்து நாட்களுக்குப் பிறகு, அவர் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு மாற்றப்பட்டார்; எனினும் அவருடைய நிலைமை இன்னும் மோசமாகதான் மாறியது. அவருடைய மோசமான நிலைமையால், மருத்துவர் அவருடைய மரணத்திற்கு ஆயத்தப்படுங்கள் என்று அவருடைய மனைவியினிடத்தில் சொல்லிவிட்டார்.

அடுத்த நாள் மாலையில், அவருடைய மனைவி இஸ்ரேலில் இருக்கும் அவரின் சகோதரர் போதகர் யூரி காமிக்கோவ்–ஐ அவருக்காக தொலைபேசி மூலம் ஜெபிக்க கேட்டுக் கொண்டாள். அந்த சமயத்தில் உயர்திரு. சூஜின் லீ, அறிவர். ஜேராக் லீ அவர்களின் 2009 இஸ்ரேல் படைமுயற்சி கூட்டத்தின் நான்காவது வருட ஞாபகார்த்த கூட்டத்தை இஸ்ரேலில் நடத்திக் கொண்டிருந்தார். ஷொல்ஸ்கயாவில் இருக்கும் தன் சகோதரருக்குப் பதிலாக போதகர் யூரி காமிக்கோவ் அறிவர். லீ ஜெபித்துக் கொடுத்த கைக்குட்டையின் (அப்போஸ்தலர் 19:11–12) ஜெபத்தை போதகர் சூஜின் லீயிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

அடுத்த நாள் காலையில், பாவெல் தானாகவே எழுந்தார்; சில உணவுகளை உட்கொண்டார்; தூக்க மாத்திரைகளை உட்கொள்ளாமல் தூங்கினார். அவர் மருத்துவமனையிலிருந்து வெளியேறுவதற்கு முன்பதாக அவருக்கு நடந்த பரிசோதனையும், கதிர்வீச்சு சோதனையும் அவரில் இருந்த நுரையீரல் வீக்கங்களானது முழுவதும் இயல்பானதை காண்பித்தது.


அக்டோபர் 25, 2013
நுரையீரல் வீக்கம் தொடங்கியது

அக்டோபர் 30, 2013
நுரையீரல் வீக்கம் மறைந்தது

◀ அக்டோபர் 25, 2013
நுரையீரல் வீக்கம் கடுமையாக இருந்தது



**மருத்துவர். சங்க்யு யங், பன்சுக் உள்ளுறுப்பு மருத்துவ மற்றும் ரேடியலாஜி மருத்துவமனையின் இயக்குனர்**

## “அவள் மூக்குக்கண்ணீர் சுரப்பியில் ஏற்பட்ட அடைப்பிலிருந்து சுகம்பெற்றாள்”



73 வயதான இளம் கண்காணியை யங்சன் சோ 2001ல் மூக்குக்கண்ணீர் சுரப்பியில் ஏதோ அடைப்பு ஏற்பட்டதை உணர்ந்தாள். அந்த நேரத்திலிருந்து அவளுடைய கண்களில் அழுக்குகள் சேர்ந்து தொடர்ந்து கண்ணீர் வழிந்து கொண்டே இருந்தது. அவள் ஒப்பனை செய்ய மிகவும் கடினப்பட்டாள்; அந்த நிலை அவளுடைய அன்றாட வாழ்க்கையில் சிரமத்தையும் ஏற்படுத்தியது.

அவளுடைய மூக்கில் அறுவை சிகிச்சையின்மூலம் ஒரு குழாயை பொருத்தினர்; எனினும் அவள் அந்த குழாயை எடுத்தபின்பதாக மீண்டும் கண்ணீர் வர தொடங்கியது. அதன் பின்பிலிருந்து, கண்ணீர் விடாமல் வந்துக்கொண்டே இருந்தது. எனவே அவளுக்கு இரண்டு குழாய்கள் பொருத்தப்பட்டது. எனினும் அவளுடைய இந்த நிலைமை தொடர்ந்தது. அவள் சிகிச்சை எடுத்து வாழ்வதை தவிர வேறு வழி இல்லாத நிலையிலும், அவள் சிகிச்சை எடுப்பதை விட்டுவிட்டாள்.

2014ல் அவள் மான்மின் கோடை சுற்றுலா முகாமில் பங்குபெற்று அறிவர். ஜேராக் லீ அவர்களுடைய ஜெபத்தைப் பெற்றுக்கொண்டாள். அந்த கோடை முகாமின் கடைசிநாளில் அவளுடைய மூக்கிலிருந்து மஞ்சள் நிறத்தில் சளி வெளியேறத் தொடங்கியது. இரண்டு வாரங்களாக அது தொடர்ந்தது. இரண்டு வாரத்திற்குப் பிறகு வந்த ஞாயிற்றுக்கிழமை காலையில் அவளுக்கு தும்மல் வந்தது. அப்போது அவளுடைய கண்ணின் கீழ்பகுதியிருந்து மூக்கு துவாரம் வரை எவ்வித இடையூறுமின்றி சுத்தமாய் இருப்பதைப் போன்று அவள் உணர்ந்தாள். அன்றுமுதல் அவளுக்கு இருந்த மூக்குக்கண்ணீர் சுரப்பி அடைப்பு முற்றிலும் நீங்கினது. அவளுடைய கண்ணில் எவ்வித அழுக்கும் தோன்றவில்லை; கண்ணீரும் வரவில்லை.

அவளுடைய மூக்குக்கண்ணீர் சுரப்பியில் உண்டான அடைப்பு மருத்துவத்தினால் குணமாகவில்லை. மாறாக அது ஜெபத்தினால் சரியாக்கப்பட்டது. அது மிகவும் ஆச்சரியம். இந்த சாட்சியை அறிமுகப்படுத்திய பிறகு அநேக கிறிஸ்தவ மருத்துவர்கள் மகிழ்ச்சியினால் நிறைந்தவர்களாய் தேவனுக்கு மிகப் பெரிதான மகிமையை செலுத்தினர்.



◀ டெக்ரையோசிஸ்டோகிராஃபி: மூக்குக்கண்ணீர் சுரப்பிகளின் வலது நாளத்தின்மூலமாக நாசிக் குழியினுள் நீரானது இயல்பாக செல்லுகிறது.

GCN Global Christian Network
MIS Manmin International Seminary
Chennai Manmin Holiness Church
WCDN World Christian Doctors Network